**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.173 நாள் : 30.05.2026

**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், மாதவரம் மற்றும் அண்ணாநகர் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையங்களின் செயல்பாட்டினை இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மற்றும் அண்ணாநகர் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையங்களின் செயல்பாடுகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (30.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாதவரம் மண்டலத்தில், மாதவரம் சின்னசேக்காடு பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பொது தனியார் பங்களிப்பின் மூலம் 5 ஏக்கர் பரப்பளவில் திட்டம்-1 மற்றும் 3 ஏக்கர் பரப்பளவில் திட்டம்-2 என தலா 100 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் உணவுக் கழிவுகள் கொள்ளளவுடன் அமைக்கப்பட்டுள்ள உயிரி எரிவாயு நிலையங்களின் செயல்பாடுகளை மாநகராட்சி ஆணையாளர் கேட்டறிந்து ஆய்வு செய்தார். உயிரி எரிவாயு உற்பத்தி நிலையத்தில் உணவுக் கழிவுகள், காய்கறிக் கழிவுகள் மூலம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப்படும் செயல்பாடுகளைப் பார்வையிட்டு கழிவுகளை முறையாக பயன்படுத்தி எரிவாயு உற்பத்தியை அதிகப்படுத்தி கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக, அண்ணாநகர் மண்டலம், சேத்துப்பட்டு பகுதியில் மாநகராட்சியின் சார்பில் பொது தனியார் பங்களிப்புடன் 100 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் உணவுக் கழிவுகளைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் உயிரி எரிவாயு தயாரிக்கும் நிலையத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், உணவு மற்றும் பழம், காய்கறி ஈரக்கழிவுகள் மூலம் உயிரி எரிவாயு உற்பத்தி செய்யப்படுவது மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட எரிவாயு ஆகியவற்றை பாதுகாப்பாக வணிக மற்றும் இதரப் பயன்பாட்டிற்கு கொண்டு செல்லுதல் போன்ற பணிகளைப் பார்வையிட்டு இந்நிறுவனத்திற்கு தேவைப்படும் ஈரக்கழிவுகளை நாள்தோறும் குறைவில்லாமல் வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். சிறப்பு வாய்ந்த இத்திட்டத்தினால் மாநகராட்சியில் ஈரக்கழிவுகள் திறம்பட அகற்றப்படுவதோடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த தூய்மையான உயிரி எரிபொருள் உற்பத்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, கோடம்பாக்கம் மண்டலம், கோயம்பேடு சென்னை குடிநீர் வாரியத்தின் மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் மாநகராட்சியின் சார்பில்

தனியார் பங்களிப்புடன் உயிரி எரிவாயு நிலையத்திற்கான பணிகளைத் தொடங்குவது தொடர்பாகப் பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பணிகளை விரைவில் தொடங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது, இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**